## திருவள்ளூரில் – கழகக் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்குகள் கேட்டு மாபெரும் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டம்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலினின் எழுச்சியுரை கேட்க, ஆயிரமாயிரவர் குழுமிய காட்சி காணீர்!



## தமிழ்நாட்டு மக்களின் கணக்கு என்றைக்குமே தப்பாது! பா.ஜ.க.வின் ஆணவத்திற்கு -

# அ.தி.மு.க.வின் துரோகங்களுக்கு ஒருசேர முடிவுரை எழுதுவோம்!



### திருவள்ளூர் - மாபெரும் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில்

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

**திருவள்ளூர், ஏப். 15–**

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (13.4.2026) மாலை திருவள்ளூரில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில், "தமிழ்நாட்டு மக்களின் கணக்கு என்றைக்குமே தப்பாது! பா.ஜ.க.வின் ஆணவத்திற்கும் – அ.தி.மு.க.வின் துரோகங்களுக்கும் ஒருசேர முடிவுரை எழுதுவோம்!" என்று உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டார்.**

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–**

தமிழ்நாட்டின் வடக்கு வாசலாக இருக்கும் திருவள்ளூருக்கு நான் வந்திருக்கிறேன்! தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிக்கு வந்திருக்கிறேன். வளர்ந்து வரும் நகரங்களும் - அழகிய கிராமங்களும் ஒன்று சேர்ந்திருக்கும் திருவள்ளூருக்கு, அடுத்தகட்ட வளர்ச்சிக்காக உங்களிடம் வாக்கு கேட்டு வந்திருக்கிறேன்.

தமிழ்நாடு எப்போதுமே தனித்துவமான மாநிலம். அதற்குக் காரணம், நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்.

**தமிழ்நாட்டிற்கு ஆபத்து - எப்போதும் வடக்கில் இருந்துதான் வரும்!**

உங்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். பெரும்பாலும், தமிழ்நாட்டின் கிராமத் தெய்வங்கள் வடக்கு நோக்கிதான் உட்கார்ந்திருக்கும்; ஏன் என்றால், தமிழ்நாட்டுக்கு ஆபத்து எப்போதும் வடக்கில் இருந்துதான் வரும். அப்படி, எதிர் வரும் N.D.A. என்ற ஆபத்தைத் தடுத்து நிறுத்தும் தேர்தல்தான், இந்தத் தேர்தல்! தமிழ்நாட்டைக் காக்க நீங்கள் அனைவரும் தயாரா? ('தயார்' என, கூட்டத்தினர் குரல்!) டெல்லிக்கு கேட்க வேண்டும்.

இதே திருவள்ளூரில் நின்றுதான், ஒன்றிய பா.ஜ.க. அரசை நோக்கி, "எத்தனை ஏவல் அமைப்புகளை வேண்டுமானாலும் துணைக்கு அழைத்து கொண்டு வாருங்கள், தமிழ்நாடு என்றைக்குமே டெல்லிக்கு Out of Control–தான்" என்று சவால்விட்டேன். அந்தச் சவாலில் தமிழ்நாடு வெற்றி பெற வேண்டும். அதற்கு நாம்தான் வெற்றி பெற வேண்டும். 'D.M.K. Unstoppable' என்று திராவிட மாடல் 2.0 ஆட்சியை நாம் அமைத்தே ஆக வேண்டும்!

ஐந்தாண்டுகளுக்கு முன்பு, அடிமை அ.தி.மு.க. ஆட்சி செய்த காலத்தில் தமிழ்நாடு எப்படிப்பட்ட தலைக்குனிவை எல்லாம் சந்தித்தது என்று நீங்கள் நினைத்துப் பாருங்கள். தினந்தோறும் ஒரு கோமாளிக் கூத்தை அரங்கேற்றுவார்கள். திறனற்ற நிர்வாகத்தால், மக்களை கொடுமைகளுக்கு - இன்னலுக்குள்ளாக்கி, வீதியில் இறங்கிப் போராடும் நிலைமைக்குத் தள்ளிவிடுவார்கள்!

**ஒன்றிய அரசிடம் பழனிச்சாமி கொடுத்த விலை, தமிழ்நாட்டு உரிமைகள்!**

உங்களுக்கெல்லாம், ஆப்பத்தை குரங்கு பங்கிட்ட கதை தெரியும்தானே? அப்படிதான் இப்போது, பி.ஜே.பி. - அ.தி.மு.க.வைப் பங்கிட்டுக் கொடுக்கிறேன் என்று வந்து, பழனிசாமி எனும் அடிமையை அடையாளம் கண்டு, அ.தி.மு.க. தலைவராக - அதாவது, பா.ஜ.க. கிளைச்செயலாளராக நியமித்திருக்கிறார்கள். தனக்குப் பதவி கொடுத்தால் போதும், சம்பந்திக்கு ரெய்டு நடக்காமல் இருந்தால் போதும், இதற்காக பழனிசாமி கொடுத்த விலைதான், தமிழ்நாட்டு உரிமைகள்!

கிராமத்தில், "இருக்க இடம் கொடுத்தால் மடத்தை கேட்பான்" என்று சொல்வார்கள். அதுபோன்று, பழனிசாமி எனும் அடிமை இருக்கும் தைரியத்தில் தான், "அ.தி.மு.க.வை வைத்து, N.D.A. ஆட்சி நடத்துவோம்! இந்தியைத் திணிக்கும் மும்மொழித் திட்டத்தைச் செயல்படுத்துவோம்" என்று பா.ஜ.க.வினர் இஷ்டத்துக்கு பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கொட்டத்தை அடக்க வேண்டும். அடிமைகளை விரட்ட வேண்டும். அதற்கு, நீங்கள் அனைவரும் ரெடியா? ('ரெடி' என மக்கள் குரல்).

**இளைஞரணிக் காலத்தில் இருந்து என்னுடன் பயணிப்பவர், ஆவடி நாசர்!**

அதற்காக, இப்போது உங்கள் அனுமதியோடு வேட்பாளர்களை அறிமுகம் செய்யலாமா? ஆம் (மக்கள்).

முதலில், ஆவடி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் சா.மு. நாசர் அவர்கள். இளைஞரணிக் காலத்தில் இருந்து, என்னுடனே பயணிப்பவர்! நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், சிறுபான்மையினர் நலத்துக்கும் – வெளிநாடுவாழ் தமிழர் நலத்துக்கும் பல்வேறு திட்டங்களை உருவாக்கி, நம்முடைய ஆட்சிக்குப் பெருமை சேர்த்த அமைச்சர்! அவருக்கு நீங்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் ஆதரவு தர வேண்டும்!

> **இந்தியாவுக்கே ரோல்–மாடல்!**
>
> **தமிழ்நாடு**
>
> **கூவத்தூரில் தவழ்ந்து – ஊழலில் திளைத்து – உரிமைகளைத் தொலைத்து – தமிழ்நாட்டை நாசப்படுத்திய பழனிசாமியின் ஆட்சியில் என்ன வளர்ச்சி? 0.07 விழுக்காடு வளர்ச்சி! அதாவது, வளர்ச்சியே நின்றுவிட்டது! ஆனால், இன்றைக்கு, 11.19 விழுக்காடு வளர்ச்சி! இந்தியாவுக்கே ரோல்–மாடல்! இது, தமிழ்நாடு என்று தலைநிமிர்ந்து கம்பீரமாக சொல்லும் அளவுக்கு, ஏராளமான திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம்.**

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்